DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S. C.No.187/2018

Prosecution side witness for P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. மாரிமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2025.**

A1, A2 are present. A3 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

முதல்விசாரணை:–

நான் கடந்த 20 வருடங்களாக தூத்துக்குடி தாளமுத்துநகர் தாய்நகர் 2 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தவேலை செய்து வருகிறேன். சாட்சி அய்யாதுரை மகன் அப்பாதுரை என்பவரை தெரியாது. ஆஜர் எதிரி ஜெமினி என்ற சுரேஷ் தெரியாது. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜாவை தெரியும். அவர் எங்கள் ஏரியாவில் குடியிருப்பதால் தெரியும். சங்கர்ராஜா கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. எங்கள் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை, ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவும் இல்லை. நீதிமன்றத்தில் காட்டப்படும் எதிரி ஜெமினி என்ற சுரேஷ் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 7** ஆகும். நீதிமன்றத்தில் காட்டப்படும் பொருட்களை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 8** ஆகும். மேற்படி 2 கையெழுத்துக்களையும் காவல்நிலையத்தில் சங்கர்ராஜா அடிபட்டு கிடந்தது சம்மந்தமாக தாளமுத்துநகர் போலீசார் என்னிடம் வாங்கினார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள், அப்பொழுதும் மேற்படி விவரத்தைதான் சொல்லியுள்ளேன். எங்கள் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

, போலீசார் விசாரணையின்போது, கடந்த 07.01.2017 ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணியவில் நானும், எனது உறவினரான முள்ளக்காடு அய்யாதுரை மகன் அப்பாதுரை என்பவரும் ராஜபாளையம் கடற்கரையில் இருக்கும்போது தாளமுத்துநகர்

காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய வழக்கு சம்மந்தமாக இவ்வழக்கின் எதிரி ஜெமினி என்ற சுரேஷ் என்பவரை கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரிக்க மேற்படி எதிரி ஜெமினி என்ற சுரேஷ் எவ்வித தூன்புறுத்தலோ, ஆசைவார்த்தையுமின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனை ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்தான் நானும், அப்பாதுரையும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி ஜெமினி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை அடையாளம் காட்டி ஆஜர் செய்வதாகவும், அதை எங்கள் முன்னிலையில் அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சியில்தான் நானும், அப்பாதுரையும் கையெழுத்து செய்துகொடுத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S. C.No.187/2018

Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. மகேஷ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2025.**

A1, A2 are present. A3 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

முதல்விசாரணை:–

நான் கடந்த 15 வருடங்களாக தூத்துக்குடி தாளமுத்துநகர் தாய்நகர் 1வது தெருவில் குடியிருந்து வருகிறேன். 2017 ஆம் வருடம் கார்வைத்து ஓட்டி டிரைவராக தொழில் செய்து வந்தேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கராஜை தெரியும். கடந்த 7 வருடத்திற்கு முன்பு நான் வீட்டில் இருந்தேன். அப்போது ஒரு அண்ணன் தற்போது பெயர் ஞாபகமில்லை, அவர் சங்கர்ராஜாவை என் வீட்டிற்கு தூக்கி வந்து அடிபட்டு கிடப்பதாகவும், அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று கூறினார், உடனே நான் எனது காரில் சங்கர்ராஜாவை ஏற்றி அரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம். அதன்பின்பு சங்கர்ராஜா சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்குவிசாரணை (அனைத்து எதிரிகள்தரப்பில்)

சங்கர்ராஜாவிற்கு எப்படி அடிபட்டது, யாரால் அடிபட்டது என்று தெரியாது என்றால் சரிதான். அரசுமருத்துவமனையில் சங்கர்ராஜாவை சேர்க்கும்போதும் மேற்சொன்னவாறு எப்படி, யாரால் அடிபட்டது என்று தெரியாது என்று சொல்லித்தான் சேர்த்தேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.